போதனா விஷய பூங்கொத்து

ாதமொருமுறை மலரும்

Editor & ... Lourduswami, B.A., L.T.
Publis... ...ning School, Trichinopoly.
R. ...

JL
N46.36.12
21001

செ... ...ூன் 1946 மலர் 12

...முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணு 2.

போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து 36] ஜூன் 1946 [மலர் 12

பத்திராதிபர் குறிப்புகள்

ஸெக்கண்டரி கிரேடுக்கு ஒருவருஷ போதனா பயிற்சி. (Secondary Grade Training-One Year) நாளது 1946-ம் வருஷ ஜூலை மாதம் 1-ம் தேதியிலிருந்து "ஸெக்கண்டரி கிரேடுக்கு" போதனாமுறைப் பயிற்சிகாலம் ஒரே ஒரு வருஷகாலம்தான். (Vide Proceedings of the D. P. I. Madras, R. C. No. 33-B/1—45 dated 4-5-'46).

இதற்கு S. S. L. C. தேறினவர்களும்—Eligible for College Course—S. S. L. C. பரீட்சையில் தவறிப்போய் இருந்தாலும், மறுபடியும் படித்துப் பரீட்சை எழுதி, "கம்ப்ளீட்" செய்து (S. S. L. C. Completed) Public Service-க்குப் போதுமான மார்க்குகள் வாங்கியுள்ளவர்களும் மேற்படி "ஸெக்கண்டரி கிரேடில்" சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

[நம் "பாடசாலையில்" மேற்படி ஸெக்கண்டரி கிரேடு ஒருவருஷ வகுப்புகள் ஜூலை மாதம் 1-ம் தேதியிலிருந்து தொடங்கும். ஆகவே அதில் சேர்ந்து படிக்க விருப்பமுள்ளவர்கள் இப்பாடசாலை "தலைமை ஆசிரியருக்கு" மனுக்களை (Application) உடனே அனுப்பக்கடவர்.]

* * * *

சென்ற வருஷத்தில் அதாவது 1945-ல் சேர்ந்து பயின்று வருபவர்களுக்கு 2 வருஷங்கள் பயிற்சிகாலம் என்பதை அறியவும். அவர்களுடைய பயிற்சிகாலம் 1947-ல்தான் முடிவாகும்.

இனி "ஸெக்கண்டரி கிரேடு" மாணவர்கள் அனைவர்க்கும் "ஸ்டைபெண்ட்" (Stipends) ரூ. 18 வீதம் வழங்கப்படும்.

"எலிமெண்டரி கிரேடு" மாணவர்களுக்கும் "ஸ்டைபெண்டில்" (Stipends) உயர்வு உண்டு. அதாவது இவர்களுக்கு ரூ. 12 வீதம் உயர்த்திக் கொடுக்கப்படும். இதைத்தவிர, பயிற்சிகாலம் முதலியவற்றில் யாதொரு மாறுதலும் இல்லை. இவர்களுக்கு 2 வருஷ[illegible] பயிற்சிகாலமாகும்.

T. S. L. C. பரீட்சை 1946. சென்ற மார்ச்சு மாதம் நடைபெற்ற ஷை பரீட்சையில் ஸெக்கண்டரீ கிரேடு (Secondary Grade) மாணவர்களில் 92% தேறியுள்ளார்கள். விவரம் அடியிற் காண்க. இவ்வாறு நம் மாணவர்கள் மிகத் திறமையாகத் தேறியுள்ளதைக் குறித்து நாம் வெகுவாய் மகிழ்ச்சியடைவதுடன், தேறியுள்ள நம் அன்பார்ந்த மாணவர்கள் அனைவர்க்கும் எமது சந்தோஷத்தையும், ஆசியையும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

* * * *

இப்பரீட்சையில் முதன்மை மார்க்குகள் வாங்கியுள்ள V. Rayappan (54%); K. M. Arokiam (54%) ஆகிய இவ்விருவர்க்கும் நம் பாடசாலைத்தினக் கொண்டாட்டத்தன்று வழக்கம்போல் பதக்கப்பரிசு அளிக்கப்படும்.

சென்னை கல்வி இலாகா

[Fort St. George Gazette Part I-B dated 11-6-'46. Page 276.]

VIII Standard Public Examination 1946.

It is hereby notified that "The Middle School English Reader—Book IV" published by Sri R. Logenatham Pillai (Proprietrix—R. Doraisami Ammal), No. 16, Palliappan Street Sowcarpet P. O., Madras (Special Edition for the VIII Standard Public Examination, 1947, printed in the year 1946) has been prescribed as a text-book for the subject, viz., English (Optional) for the VIII Standard Public Examination, 1947.

Copies for the book can be had for sale shortly from the above publisher at Rs. 0-14-0 (Annas fourteen only) per copy.

The following poems are prescribed for memorisation. (1) The Miller of the Dee. (2) Try Again. (3) A Faithful Friend.

* * * *

It is hereby notified that fresh text-books have been published departmentally in the principal languages of the Presidency, viz., Tamil, Telugu, Malayalam, Kannada, and Urdu for sale shortly at the Government Press, Mount Road, Madras.

Results of the T. S. L. C. Examination April, 1946

Secondary Grade

Reg. No.	Name	Percentage of Marks	Reg. No.	Name	Percentage of Marks
878	A. Irudayamoney	46	858	V. A. Abdul Quader	35
879	M. Maria Louis	46	859	C. Palaniswami	47
880	S. Paul	43	860	I. Savarimuthu	41
881	S. L. X. Alphonse	48	861	R. Ragothaman	41
882	S. Maria Alangaram	43	863	J. Pappu Marie	35
883	M. Krishnamurthi	46	864	R. Maria Susai	41
884	V. A. Savarinathan	43	865	V. R Maria Susai	35
885	K. Vaitheeswaran	45	867	A. Santiago	46
886	G. S. William Duraisamy	46	868	P. Jeya Raj Gnanavaram	43
887	V. Rayappan	**54**	869	A. Savarimuthu	44
888	S. Mathalamuthu	41	872	K. A. Yesu Ratnam	47
889	A. Savarinathan	38	873	L. F. Joseph Raj	45
890	P. Arockiam	43	874	V. Alagirisami	41
891	S. M. Singa Rayar	39	875	M. Edward	40
892	S. Susaikannu	38	877	M. Francis	43
893	I. Rose Antony	45	876	J. S. Xavier Fernandez	41
894	K. M. Arokiam	**54**			
895	V. Rajagopalan	44	994	L. Chinnappan	45
898	P. Rangaswami	40	995	A. David	45
857	M. Antony Durai Raj	43	1261	A. Devasagayam	47

Failures

862	R. Thiagarajan	The groups in which these failed will be announced later.
866	S. Jegadoss	
871	S. John Ratnasamy	
896	S. Chinnappa	
897	S. Mookan	

பாடசாலை ஒழுங்குமுறை

12 JUL 1946

[Sri N. R. Nanjundeswaran]

கற்றல் கற்பித்தல் ஒழுங்காக நடைபெற ஆசிரியரும் மாணவரும் சில ஒழுங்கு முறைகளைக் கையாளவேண்டும். ஆசிரியர் தம் சம்பந்தப் பட்ட பாடங்களைப் போதிப்பதற்குத் தகுந்த தயாரிப்புடன் இருத்தல் வேண்டும். மாணவர் ஆசிரியர் போதிப்பதைக் கேட்பதற்கு ஆர்வமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். இதைத்தான் ஒழுங்குமுறை என்கிறோம். இதற்கு 3 நிலைகள் முக்கியம் :—

I. அதிகாரத்திற்குட்பட்ட நிலை :—சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் நடத்தல் வேண்டும். (வெகுமதி அல்லது ஆசிரியரின் அதிகாரத்திற்குத்தான் கட்டுப்படுவார்கள்.)

II. சமூக நிலை :—தன்னைச் சுற்றியுள்ளவர்களுடன் சேர்ந்து கொண்டு தன்னைப் பிறர் மதிக்கவேண்டும் என்ற எண்ணத்திற்காகக் கட்டுப்படுவார்கள்.

III. 18 வயதுக்குப் பிறகு பூர்ண அறிவு பெற்றவுடன் தன் கடமையை உணர்ந்து தன் லட்சியத்திற்குத் தகுந்த தன் ஒழுக்கத்தைச் சீர்படுத்திக்கொள்கிறான்.

ஒரு பாடசாலையில் ஒழுங்குமுறை நிலைத்திருப்பதற்கு அவசியமான வசதிகள்

21011

1. இடவசதி: காற்றோட்டம் முதலியன மாணவர்களுக்குப் போதுமானதாய் இருத்தல் வேண்டும். களைப்புக்கு இடம் கொடுத்தல் கூடாது.
2. உட்காரும் ஆசனம் பெஞ்சு முதலியவை சௌகரியமாய் இருத்தல் வேண்டும்.
3. உபாத்தியாயர் இருப்பிடம் கரும்பலகை பொருத்தப்பட்டிருக்கும் இடம் முதலியன எல்லா மாணவர்களின் திருஷ்டியிலும் எளிதில் படக்கூடியதாய் இருத்தல்வேண்டும்.
4. தேசப்படங்கள், மற்ற உபகரணங்கள் முதலியவற்றை எல்லா மாணவர்களுக்கும் தெரியும்படியான இடத்தில் அமைக்கவேண்டும்.
5. வகுப்பறை வெளிச்சத்தம் கேட்காத இடத்தில் அமைவது அவசியம்.
6. ஆசிரியர் தங்கள் நடத்தையிலும் பழக்கவழக்கங்களிலும் சிறுவர்களுக்கு உதாரணமாக விளங்கவேண்டும்.

ஒரு பாடசாலையின் ஒழுங்குமுறை அப்புள்ளியின் மதிப்பையும் கௌரவத்தையும் பொறுத்திருக்கின்றது.

பாடசாலையின் காரியங்களைக் கட்டுப்பாடுடனும் சச்சரவின்றியும் நடைபெறுமானால் புதியதாக வரும் மாணவர்களும் இதர சிறுவர்களைப் பின்பற்றி அமைதியுடன் நடந்துகொள்வார்கள். தவறுதலுக்கு இடமேயிராது.

ஒரு பாடசாலையில் சரியான ஒழுங்குமுறை அனுசரிக்கப்படுகின்றது என்பதற்கான அத்தாட்சிகள்

1. ஆஜர் சரியான காலத்தில் மாணவரும் ஆசிரியர்களும் குறிப்பிட்ட வகுப்பிலோ அல்லது இடத்திலோ ஆஜராதல்.

2. உபாத்தியாயர்களும் மாணவ மாணவிகளும் சுற்றுப்புறமும் சுத்தமாயிருத்தல். உபாத்தியாயர் இதற்கு முன்மாதிரிகையாய் இருத்தல் வேண்டும்.

3. பாடசாலைச் சாமான்களைப் பாதுகாத்தல்.

4. வகுப்பறையில் கவனமும் பாடபோதனையின் லக்ஷணமும்.

5. காலந்தவறுமை.

6. ஒரு பாடசாலையில் எல்லாவிதமான சௌகரியங்கள் இருந்தபோதிலும் சில சந்தர்ப்பங்களில் ஒழுங்கு முறைக்கு முரண்பாடான காரியங்கள் நடக்கத்தான் செய்யும். அதிக பால்ய வயதினர் கூடுமிடங்களில் ஒன்றிரண்டு தவறுதல்கள் நேருவது இயற்கையேயாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒழுங்கு முறையைத் திரும்பவும் நிலைநிறுத்துவதற்கான சில உபாயங்களைக் கையாளவேண்டியிருக்கிறது. அவைகளாவன :—

(1) நற்புத்தி கூறல். (2) வெகுமதியளித்தல். (3) தண்டனை.

பொதுவாகச் சிறுவர்களும் சிறுமிகளும் அறியாமையினுல் சில குற்றங்களை இழைக்கின்றனர். இவர்களைப் புத்திமதி கூறிச் சீர்திருத்துவதே நலம். இது பலன்தர வேண்டுமானுல் ஆசிரியர் மாணவரிடை நற்பெயர் விளங்கியவராய் இருக்கவேண்டும். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உள்ள அன்பு சிறந்த முறையில் அமைந்திருத்தல் வேண்டும்.

வகுப்பறையில் ஒழுங்கு முறையில் தவறுதல் ஏற்படாமல் இருக்க உபாயங்கள்

1. சோம்பலுக்கு இடம் தராமல் சிறுவர்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுத்தல் வேண்டும்.

2. மாணவர்களை எப்பொழுதும் கண்காணித்து மேற்பார்வையிட வேண்டும்.

3. கோஷ்டியாகச் சேர்ந்து தேகாப்பியாசம் செய்வதின் மூலமும் ஒழுங்கு முறையும் அபிவிருத்தி அடையலாம். விளையாட்டுக்களைச் சரிவர நடத்துவதின் மூலமும் மாணவர்களிடை குழுவுணர்ச்சியை வளர்த்தும் ஒழுக்கத்தை நிலைநாட்டலாம்.

Note :—சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் ஒழுங்காக நடந்து கொள்வதற்காகத் தலைமை ஆசிரியரும் உதவி ஆசிரியரும் சில புதிய விதிகளையும் சட்டங்களையும் வெளியிட வேண்டிவரும். (Rules and Commands) இப்புதிய உத்திரவுகளை எல்லா மாணவரும் உணரும்படி செய்தல் வேண்டும். இந்தச் சட்டங்களை அட்டைகளில் எழுதிப் பல பாகங்களிலும் தொங்கவிடலாம்.

இவ்விதிகளை அமைக்கும்போது பின்வரும் விஷயங்களை கவனித்தல் அவசியம்

1. விதிகள் அதிகமாய் இருத்தல் கூடாது. (Not more than six or seven).

2. விதிகளை எல்லா மாணவர்களும் புரிந்து கொள்ளும்படி செய்தல் வேண்டும்.

3. உத்தரவுகள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் திட்டமானதாய் இருத்தல் வேண்டும். விதிகளை நன்கு ஆலோசனை செய்து வெளியிடுதல் வேண்டும். அவைகளை உடனே மாற்றுவது என்பதும் கூடாத காரியம்.

4. விதிகளை மீறின யாவரையும் தண்டிக்கவேண்டும்.

5. விதிகள் கூடியமட்டும் யாவருக்கும் பொதுவானதாய் இருத்தல் வேண்டும்.

6. ஏதாவது ஒரு தீமையான காரியத்தைக் கூறி அதைச்செய்யாதே என்று கூறுவது கூடாது.

தண்டனைகள்:—பள்ளிக்கூட தண்டனைகளின் நோக்கம் மாணவர்களைச் சீர்திருத்துவது என்பதை மறந்துவிடக்கூடாது. சில சந்தர்ப்பங்களில் தண்டனையானதாக இருக்கலாம். தண்டனையானது பாடசாலையிலுள்ள மற்ற மாணவருக்கு ஓர் எச்சரிக்கையாக விளங்கும். சில குற்றங்கள் பரவாமல் இருப்பதற்காகக் கடுமையான தண்டனைகள் அளிக்கவேண்டிய அவசியம் நேரிடலாம். மாணவர்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள ஒருக்காலும் தண்டனையைக் கொடுத்தல் கூடாது.

தண்டனையைக் கையாளும்போது நாம் பின்பற்றவேண்டிய சில நிபந்தனைகள்

1. பாடசாலையில் அளிக்கப்படும் தண்டனைகள் மாணவர்கள் செய்த குற்றத்திற்குத் தகுந்ததாய் இருத்தல்வேண்டும். தண்டனையானது மாணவரின் குற்றத்தால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்யக்கூடியதாயிருப்பது நலம்.

2. தண்டனையானது ஆசிரியருக்கு அதிக சிரமத்தைக் கொடுக்கக் கூடாது—தண்டனைக்கே ஆசிரியர் அதிக நேரத்தைச் செலவழிக்கவும் கூடாது.

3. நாம் அறிந்த தண்டனையானது மற்ற வகுப்பிலுள்ள மாணவர்களால் நியாயமானது என்று ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் தண்டனை அமைதல் வேண்டும்.

4. குற்றத்தைத் தொடர்ந்து உடனே தண்டனை அளிக்கவேண்டும்.

5. குற்றம் செய்தவன்கூட ஆசிரியரின் நியாய புத்தியிலும் பக்ஷபாதமின்மையிலும் சந்தேகப்படக்கூடாத விதத்தில் தண்டனை அமைவது நலம்.

6. மாணவன் செய்த குற்றம் யாது என்பதை அறிந்தபின்பே தண்டனை அளிக்கவேண்டும்.

(தொடரும்

பாடக்குறிப்பு

பாடம்: பூகோளம். **வகுப்பு:** I பாரம்.

நோக்கம்:—காங்கோ நதிப்பிரதேசம், காங்கோநதி உற்பத்தியாகும் இடம், சங்கமாகும் இடம், ஓடும் பிரதேசம், இந்நதிப்பிரதேசத்து ஜனங்கள்—இவற்றைப் போதித்தல்.

உபகரணம்:—" காங்கோ நதிப்பிரதேசத்தின் படம், நீக்ரோக்களின் படம்.

விஷயம்	முறை
பீடிகை:—முதலில் பிள்ளைகளை திருச்சினுப்பள்ளிக்குப் பக்கத்தில் ஓடும் நதி காவிரி என்பதையும், அதன் பக்கத்தில் வசிக்கும் ஜனங்களுக்குக் காவிரி நதிப் பிரதேசத்து ஜனங்கள் என்பதாக முதலாகப் போதித்தல்.	பீடிகையின்மூலம் பிள்ளைகளின் முன்னறிவைச் சோதித்தல்.

நோக்கவெளியீடு:—பிறகு, அம்மாதிரியே இன்றையதினப் பாடத்தில் ஆப்பிரிக்காவில் ஓடும் ஒரு பெரிய நதியாகிய காங்கோவின் பிரதேசத்து ஜனங்களைப்பற்றி படிப்போம்.

விஷயம்:—

1. காங்கோ நதி ஆப்பிரிக்காவில் ஓடும் பெரிய நதிகளில் 2-வது. முதலாவது நைல். உற்பத்தியாகும் இடம் டாங்கனியக்கா ஏரி. ஓடும் பிரதேசம் ஆப்பிரிக்காவின் மத்திய பாகம். போய்விழும் சமுத்திரம் அட்லாண்டிக்.	படத்தில் நதியைக் காட்டி பிள்ளைகளிடமிருந்தே நதியின் பெயர்—உற்பத்தியாகும் இடம்—ஓடும் திக்கு போய்விழும் சமுத்திரம் இவைகளைச் சொல்லச்சொல்லுதல்.
2. இந்த நதி பாயும் பிரதேசத்தின் விஸ்தீரணம் நம் இந்தியா தேசத்தின் $3/4$ பங்கு விஸ்தீரணம்.	இந்தியா படத்தைப் போட்டு அதில் $3/4$ பங்கு விஸ்தீரணத்தைக் காட்டி பிள்ளைகளுக்குக் காங்கோ நதிப் பிரதேசம் அவ்வளவு பெரியது என்பதாகக் கூறல்.

விஷயம்	முறை
3. அதிகமான மழை பெய்யும் பிரதேசமாயும், மிகவும் உஷ்ணமாயும் இருப்பதால்—காடுகள் அதிகம்—ஜனங்கள் வசிக்கமுடியாத பிரதேசம்.	படத்தில் நிரக்ஷரேகை அக்கண்டத்தின் மத்தியில் போவதையும் காங்கோ நதிப் பிரதேசம் நிரக்ஷரேகைக்குப் பக்கத்தில் இருப்பதால் அதிக உஷ்ணம், அதிகமாக மழை என்பதாகப் போதித்தல்.
4. அப்பிரதேசத்தில் வசிக்கும் ஜனங்கள் (நீக்ரோக்கள்) இவர்கள் பாண்டு என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள்.	படத்தில் இருக்கும் நீக்ரோக்களைக் காட்டி அவர்கள் காட்டில் வசிக்கும்படியான நாகரிகமில்லாத ஜாதியார்கள் என்பதைக் கூறல்.
5. கிராமங்களில் வசிக்கிறார்கள். வீடு ஓலை வீடு—தோட்டங்கள்—வயல்கள். இவைகளைப் பயிரிடுதல். முக்கியத் தொழில்.	உஷ்ணமண்டல விளைபொருள்களாக வாழை, பருத்தி, கரும்பு, நெல், புகையிலை இவைகள் பயிரிடப்படும் விளைபொருள்கள் என்பதாகக் கூறல்.
இதரத்தொழில்:—பாய் முடைதல்—மரக்கட்டையில் சித்திரவேலை செய்தல் இவைகளில் சமர்த்தர்கள். உலோக சாமான்களையும் செய்து கொள்ளுகிறார்கள். மீன் பிடித்தல் ஒரு தொழில்.	நதி பெரிய நதியாகப் படகு போகும்படியாக இருப்பதால், படகு ஓட்டிகளாகவும், நதியின் மீன்பிடித்தலும் இதரத்தொழில்கள்.
6. காடுகளின் ஓரங்களில் வசிக்கும் ஜனங்கள்—ரப்பர், கோந்து, பாம் எண்ணெய், பாம் பருப்பு இவைகளைச் சேகரித்து அயல்நாடுகளுக்கு அனுப்புகிறார்கள்.	ரப்பர் ஒரு மரத்தின் பால் என்பதாகவும், அது ஏராளமாக தானாக காங்கோ நதிப் பிரதேசத்தில் உண்டாகின்றன என்பதைப் பிள்ளைகளுக்குப் போதித்தல்.
7. காட்டு மிருகங்கள்: குரங்குகள், யானைகள், எருமைகள் (காட்டு)	இவைகளை எல்லாம் பழக்கி தங்கள் உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளுகிறார்கள்.
8. விஷ ஜந்துக்களும் உண்டு. Driver ants என்ற ஒருவகை எறும்புகள் மிகவும் விசேஷமுள்ளவை.	உஷ்ணப்பிரதேசத்தில் இருக்கும்படியான விஷ ஜந்துகளுக்கு விஷம் அதிகம். உதாரணமாக, நம் இந்தியாவில் உள்ள நல்ல பாம்புக்கு விஷம் அதிகம். சீமையில் உள்ள நல்ல பாம்புக்கு அவ்வளவு விஷமில்லை.

விஷயம்	முறை
புக்காமாவிற்குத் தென்கிழக்கில் செம்பு, ரேடியம், முதலிய உலோகங்கள். சுரங்கங்களில் லக்ஷம் சுதேச ஜனங்கள் வேலைசெய்துவருகிறார்கள்.	கூறி விவரித்தல்
9. காடுகளில் வசிக்கும் ஜனங்கள், பிக்மிகள் என்ற குள்ளமான ஜனங்கள்.	படங்களைக் காட்டல்
10. காங்கோநதி போக்குவரவுக்கு பயன்படுகின்றது. நீர்வீழ்ச்சி உள்ள இடங்களில் ரயில்மூலமாக போக்குவரவு நடக்கிறது.	"ஸ்டான்லி" நீர்வீழ்ச்சியைப் படத்தில் காட்டல்.
அப்பியாசம் :—சரியா, தப்பா? (1) நைல் நதி ஆப்பிரிக்காவில் ஓடும் சிறிய நதிகளில் ஒன்று. (2) ஆப்பிரிக்காவின் மேற்கே இந்துமஹா சமுத்திரம் இருக்கிறது. (3) ஸ்டான்லி மலை, காடு, நீர்வீழ்ச்சி. (4) அங்கு வசிப்பவர்கள் குள்ளர்கள், பிக்மிகள், நீக்ரோக்கள்.	அப்பியாசக் கேள்வி கேட்டு விடையை வரவழைத்தல்.

"அம்மா"

[T. Antony]

(கொத்து 36, மலர் 10-11, பக்கம் 191-ன் தொடர்ச்சி)

இதற்குமேல் அப்பாவால் தாங்க முடியவில்லை. குழந்தையை வாரியெடுத்து அணைத்துக்கொண்டே, "அவர்களெல்லாம் அதிருஷ்டம் பண்ணவர்களடா கண்ணு" என்று பதில் சொன்னார். உடனே அப்பா முகத்தை ஏறெடுத்துப் பார்த்தாள். வாயைத்திறக்காமல் அப்பாவின் கையை விலகிக்கொண்டு தானே இறங்கி, கண்கலங்க மெதுவாக நடந்துபோய் சமையற்கட்டிலிருந்த பாட்டியின் மடியில் சாய்ந்துவிட்டாள்.

சுகுமாரன் கண்ணைத் துடைத்துவிட்டு தன் அறைக்குச்சென்று வெளியே ஜன்னல் வழியாய் உற்று நோக்கினார். ஜன்னலுக்குமேலே மாட்டி வைத்திருந்த அவர் மனைவியின் படம் அவர் பார்வையைக் கவர்ந்தது. "கஷ்டப்படாதேயுங்கள். அருமைக் குழந்தைக்குத் தாயும் தகப்பனும் நீரே" என ஆறுதல் சொல்வதுபோல இருந்தது. குழந்தை வளரவளர அவரது பாசமும் வளர்ந்துகொண்டே வந்தது. அவள் பேசும் மழலைச்சொல் ஒவ்வொன்றையும் கேட்டு அப்படியே பூரித்துப்போவார்

சுகுமாரனிடம் அக்கறைகொண்டவர்கள் மறுமணப்பேச்சை எடுத்தார்கள். ஆனால் அது அவருக்கு அருவருப்பை அளித்தது. ஜானகியைத் தொட்ட கரத்தால் வேறொரு மங்கையைத் தொடுவதா? இந்த இப்பிறவிக்கு இரு மாதரை சிந்தையாலும் தொடேன். மறுபடியும் கல்யாணத்தைப்பற்றி நினைப்பதே ஜானகிக்குத் துரோகம் என்று அவர் முடிவு கட்டிவிட்டார். ஜானகிக்குமட்டுமல்ல அவள் தம்மிடம் ஒப்படைத்துச் சென்றிருக்கும் பாலகிக்கும் துரோகம் என்று கருதினார். அவருடைய தாயும் எப்படி எப்படியோ அவர் பிடிவாதத்தைக் குலைக்கப்பார்த்தாள். 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமே' என்று யார் யாரையோ விட்டெல்லாம் சொல்லச்சொல்லிப் பார்த்தாள். ஆனால் அவர் கொஞ்சமும் அசைவதாயில்லை. ஏதோ தாமுண்டு தம் குழந்தையுண்டு என்று தாமரை இலைத் தண்ணீர்போல், எதிலும் எவரிடமும் அதிகம் கலக்காமலே காலங்கழித்து வந்தார்.

பாட்டியின் மடியில் போய்ப்படுத்தவள் வெகுநேரம் வரை அப்படியே மௌனமாய்ப் படுத்துக்கிடந்தாள். அவள் மூளையும் மனமும்மட்டும் எதையெதையோப்போட்டு உருட்டிக்கொண்டிருந்தன. பாட்டி முறத்தில் எதையோ வைத்துப்பொறுக்கிக்கொண்டிருந்தாள். சுமார் ஒரு மணி நேரம் கழித்துப் 'பாட்டி' என்று தெளிவான குரல் வரவே ஆச்சரியத்துடன் "அடநாயே, விழிச்சிக்கிட்டா இப்படி வாயே மூடிக்கிட்டுப்படுத்திருந்தே?" என்று கேட்டாள்.

"ஆமாம் பாட்டி; நான் ஒரு யோசனை பண்ணிக்கிட்டிருந்தேன்" என்ற பதிலைக் கேட்டபோது பாட்டிக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. உடனே காரியத்தில் கண்ணாக, "ஏம் பாட்டி, நான் ஒண்ணு கேட்கிறேன்; சொல்லுறீங்களா?" என்றாள்.

"குதிரைக்கு ஏன் கொம்பில்லை என்று கேட்கப்போகிறே; அது தானே?"

"இல்லெபாட்டி கிட்டு, கோமதி, சரஸு எல்லாருக்கும்மட்டும் ஒரு அம்மா இருக்காங்களே, எனக்கு ஏன் இல்லே?"

"அதை ஏண்டா கண்ணு கேட்கிறே? நீ கொடுத்து வைத்தது அவ்வளவுதான்."

"இல்லே பாட்டி, எனக்கு ஒரு அம்மா பொறக்கவே இல்லையான்னு கேக்கறேன்" என்று பாட்டியை மடக்கினாள்.

"இல்லாமலென்னடம்மா? ராஜாத்தியாட்டமா இருந்தாள். தங்கக் கம்பியாச்சே. இந்த பூமி பொறுக்கலே."

"ஆமாம் பாட்டி எங்கம்மா எப்படி இருப்பாங்க?"

"உன்னாட்டமாதான். அதோ அப்பா அறையிலே படமில்லே? அது அம்மா படந்தானே?"

"பின்னே இப்போ ஏன் இல்லே?"

"அவள் நடராஜா கிட்டே சேர்ந்துவிட்டாள், அந்த மகனையும் ஏங்க வைச்சிட்டு உன்னையும் தாயற்ற தாக்கிட்டு."

“நடராஜா” என்றால் சிந்தாவுக்குத் தெரியும். பாட்டி எதற்கெடுத்தாலும் சொல்லுகிறாளே அந்த ஸ்வாமிதானென்று. அவர்தானே நமக்கு வேண்டியதெல்லாம் கொடுக்கிறவர் என்றும் தெரியும். துள்ளியோடி வந்து “அப்பா, சாமி எங்கே இருக்கிறார்?” என்று கேட்டாள் சிந்தா.

“அதோ பார் மினுக்கு மினுக்கென்று நக்ஷத்திரமெல்லாம் தெரியுதோ இல்லையோ? அங்கேதான் இருக்கிறார்” என்றார்.

“எப்பா, நாம்ப இங்கேருந்து கூப்பிட்டா அவருக்குக் கேக்குமா?”

“என் கேக்காது! அவர் காதுக்குக் கேட்காததுகூட இருக்கிறதா!” என்றெல்லாம் பேசிக்கொண்டு சாப்பிட சமையற் கட்டுக்குப் போனார்கள்.

இரவெல்லாம் ஸ்வாமி வருவதும், அம்மா வருவதும், தன்னை எடுத்து அணைத்து கொஞ்சுவதும், தனக்கு பொம்மைகளும் பலகாரங்களும் கொடுப்பதும், தன்னை மடியிலே போட்டுக்கொண்டு தாலாட்டுப் பாடுவதுமாகவே சிந்தா கனவு கண்டுகொண்டிருந்தாள். பொழுது விடிந்ததும் அதே நினைவுதான். யாரிடமும் அக்கனவை சொல்லக்கூடாதென்று தீர்மானித்தாள். அன்று மாலை தோட்டத்தில் நின்றுகொண்டு வானத்தில் மின்னும் மீனினங்களையும் அவை சுடர்விட்டு நிற்கும் ஜோதி மண்டலத்தையுமே உற்று உற்றுப்பார்த்தாள். தன்னை அறியாமலே அவள் வாய் முணு முணுக்க ஆரம்பித்தது. சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு, சாமி, நடராஜா, எங்கம்மாவை இங்கே அனுப்பேன். என்னை எல்லாரும் அம்மா இல்லேன்ணு கேலிபண்றாங்களே,” என்று வேண்டினாள்.

இதுவே வழக்கமாய்ப்போய்விட்டது அப்பாலகிக்கு. தினசரி நட்சத்திரங்களும் நிலவும் தோன்றியவுடனே “சாமி வீட்டிலே விளக்கேற்றி விட்டார்கள். சாமி, அம்மா எல்லோரும் இப்போது பேசிக்கொண்டிருப்பார்கள்” என்று எண்ணிக்கொண்டே தோட்டத்தில்போய் நின்றுவிடுவாள். சில சமயம் தன் அம்மா படத்தில் கட்டிக்கொண்டிருப்பதுபோலவே கறுப்புப்புடவை கட்டிக்கொண்டு போவது தெரியும். அப்போது, “அம்மா, நான் கூப்பிடுகிறேனே! உனக்குக் கேக்கலையா? சரஸூக்கெல்லாம் அம்மா இருக்காங்களே! நீமட்டும் என்கிட்ட வரமாட்டாயா? என் மேலே கோபமா? உனக்கு நல்ல நல்ல ரிப்பன் வச்சிருக்கேனே” என்று கெஞ்சுவாள். கடைசியில், “சாமி, நடராஜா, நீதான் எங்கம்மாவைப் பிடிச்சி வச்சிருக்கிறயாமே! கொஞ்சுண்டு அனுப்பேன்” என்று பிரார்திப்பாள்.

வானத்தில் மின்னினால், “ஐயோ, அம்மா இருக்கும் வீடு தீப்பிடித்துக்கொண்டதோ?” என்று அஞ்சுவாள். இடி இடித்தால், “ஐயோ மானம் இடிந்து விழுந்திடுமாமே! அம்மாவும்கூடவே விழுந்திடுவாங்களா!” என்று கலங்குவாள். “அப்படியே வந்து நம்ப கையிலே விழுந்தால் அடிபடாமல் பிடிச்சிக்கலாம்; அகப்பட்டா, அப்புறம் அம்மாவை விடவேமாட்டேன்,” என்று கோட்டைக்கட்டுவாள். வானத்தில் இருட்டாயிருந்தால், “இன்னிக்கி என்னமோ அம்மா வீட்டிலே விளக்கே எத்தலே” என்று வருந்துவாள்.

குழந்தைக்குச் சந்தேகம் வந்துவிட்டது. பாட்டியிடம் போனாள். "ஏம் பாட்டி, சாமி நாம்ப கேக்கறதெல்லாம் குடுப்பாரா?" என்றாள். "பக்தியுடன் கேட்டால் குடுப்பாரு" என்றாள் பாட்டி. பாட்டியை விட்டுவிட்டுச் சிந்தா தோட்டத்துக்கு வந்தாள். என்ன ஆச்சரியம்! என்றும் காணாத காட்சி. "வர்ண வர்ணமாய் வானத்திலே வளைந்து நிற்கிறதே அது என்ன? ஓ! தெரிந்துவிட்டது. சாமி வீட்டின் படிக்கட்டு. சரி, சரி நம்ப அம்மதான் வரப்போகிறாள். அதோ புறப்பட்டுவிட்டார்கள்." அவளுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. ஆனால் எங்கே வந்தாள்? அந்த படிகட்டுகூட மறைந்துவிட்டதே! அந்த மாய வில்லின் அடிபாகம் தெரிந்த இடத்திற்கு வேகமாய் ஓடினாள். அம்மாவே அல்லவா அவளைத் தேடி வந்துவிட்டாள். சந்தேகமில்லை. அதே புடவைதான். அதே உருவந்தான். "அம்மா" என்று அலறி மேலே தாவினாள். பக்கத்திலிருந்த ஒருவள், "குழந்தையைத் தூக்கிக்கொள்ளம்மா, பாவம்! நம் எதிர்வீட்டுக் குழந்தைபோலிருக்கிறது. ஏதோ அம்மா நினைப்பிலே உள்ளே வந்து கட்டிக்கொண்டது" என்று சொன்னாள். வீட்டுக்குப்போ என்றால் "நான் மாட்டேன்; நீயும் வந்தால்தான்" என்று பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தாள் சிந்தா.

குழந்தையைக் காணாமையால் தேடிக்கொண்டு சுகுமாரனும் அவர் தாயுமே அங்கு வந்துவிட்டார்கள். சுகுமாரனுக்குத் தம் கண்ணையே நம்ப முடியவில்லை. ஜானகியைப்போன்ற உருவமே. போதாக்குறைக்கு கறுப்புப் புடவையையே இவளும் கட்டியிருந்தாள். குழந்தை சிந்தாவோ, "அப்பா, இதோ பாரு, அம்மா; சாமி கிட்டேயிருந்து இறங்கிவந்துட்டாங்க" என்று ஆரம்பித்துவிட்டாள். "நல்ல அழகு, குணம், போதிய படிப்பு இருந்தும் கல்யாணமாகாமல் கிடக்கிறாள்; இக்காலத்துப் பிள்ளையாண்டான்கள் இப்படித்தான். உன்னைப்பார்த்தா என் மருமகளையே உரிச்சிவச்ச மாதிரியிருக்குது; அதுதான் உன்னை குழந்தை பிடித்துக் கொண்டுவிட்டாள்; இத்தாயில்லாக் குழந்தைக்கு நீ தாயாக வந்து சேர்ந்தால் நல்லாத்தான் இருக்கும்" என்று சுகுமாரனின் தாய் அவளுடைய மோவாயைத் தடவிக்கொடுத்தாள். திடீரென்று சுகுமாரன் மனதில் ஓர் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. கல்யாணத்திற்கு முடிவாயிற்று. திருமணவைபவங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு, "ஓ ஹோ, நம்ப அம்மா திரும்பி வந்ததை இப்படியெல்லாம் கொண்டாடுறாங்கள்" என நினைத்துச் சற்று ஒதுக்கமாகவே இருந்தாள் சிந்தா. அவளுடன் என்ன பேசுவதென்று தெரியாத சுகுமாரன் அவள் கையைப் பிடித்துக்கொண்டு "உன்னை எப்படிக்கூப்பிடுகிறது?" என்றார்.

"எங்கள் வீட்டில் கூப்பிடுகிற மாதிரி ஜானகி என்றே கூப்பிடுங்களேன்" என்றால் அவள்.

பிடித்திருந்த கையை ஆர்வத்துடன் அமுக்கிக்கொண்டே, "ஜானகி" என்றார் சுகுமாரன். இருவர் வாழ்க்கையும் இனிதே நடந்து வந்தது.

கிராமவாசிகளின் ஏற்றப்பாட்டு

[ம. குழந்தைசாமி]

(கொத்து 36, மலர் 9, பக்கம் 179-ன் தொடர்ச்சி.)

8-ம் பதியம்

(இவ்வெட்டாம் பதியத்தில் தன் கணவனுக்கு மத்தியான உணவு கொண்டு போகும் ஓர் பெண்ணைப் பார்த்து (புருஷன் மனைவி இருவர்) அதைப்பற்றி சம்பாஷித்துக் கொண்டு வழி நடக்கிறார்கள்.)

எழுபதியா ஒன்று, எழுபதியா இரண்டு
எழுபதியா மூன்று, எழுபதியா நான்கு
எழுபதியா ஐந்து, எழுபதியா ஆறு
எழுபதியா ஏழு, எழுபதியா எட்டு
ஏழையடிப் பெண்ணே, (அவள்) சோளக்கிளி போல
சோறுகொண்டு போறாள்—சோத்து மணங்கண்டு
சுழன்று வரும் வண்டு, பஞ்சையடிப் பெண்ணே
(அவள்) பச்சைகிளி போல, பாலுகொண்டு போறாள்
பாலின் மணங்கண்டு, பறந்து வரும் வண்டு
அது பசி வேளை அன்னம், பதறிக் கொண்டு போறாள்.

என்று இனிய குரலோடு அவர்கள் பாடுவதுபோல் விவசாயிகள் வேலையின் களைப்புத் தெரியாமல் இருப்பதற்கு பாடுகிறார்கள்.

9-ம் பதியம்

(இந்த ஒன்பதாம் பதியத்தில் தங்கள் தொழில் ஆண்டி என்பதை தெரிவிக்கிறாள். மாலை கட்டி விற்று ஜீவிப்பதை தெரிவிக்கிறாள்.)

எண்பதியா ஒன்று, எண்பதியா இரண்டு
எண்பதியா மூன்று, எண்பதியா நான்கு
எண்பதியா ஐந்து, எண்பதியா ஆறு
எண்பதியா ஏழு, எண்பதியா எட்டு
எட்டி மலராலே, எடுத்துக் கட்ட பூ மாலை
தும்பை மலராலே, தூய வெள்ளி மாலை
மாலை என்ன மாலை, மல்லிகைப் பூ மாலை
அண்ணன் கட்டும் மாலை, அழகான மாலை
கொழுந்தன் கட்டும் மாலை, குணமான மாலை
மாலைகளை விற்று, மனமார புசிப்போமே.

(தொடரும்).

சந்திரகுப்தரும், சாணக்கியரும் (சரித்திரம்)

சிறு நடிப்பு

[A. Kathirvelu, H. M.]

Ə/00111

600 008

காக்ஷி 1

இடம் : காடு. காலம் : பகல்.

பாத்திரங்கள் : சாணக்கியன், சந்திரகுப்தன்.

காட்டின் வழியாக சாணக்கியன் வந்துகொண்டிருக்க அப்பொழுது காலில் புல் தடுத்து விழுதல். கோபத்துடன் எழுந்து தன்னைத் தடுக்கிய புல்லை நீராக்கி நீருடன் கலந்து உட்கொள்ளுதல். இதைப் பார்த்துக் கொண்டே சந்திரகுப்தன் வருதல்.

சந்திரகுப்தன் (அருகில் சென்று நமஸ்கரித்து) சுவாமி தாங்கள் யார்? தங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன், தாங்கள் தயை கூர்ந்து தெரிவிக்கவேண்டும்.

சாணக்கியன் (சந்திரகுப்தனைப் பார்த்து) மைந்தா! எதுவேண்டுமா னாலும் கேள், சொல்லுகிறேன்.

சந். : (பணிவுடன்) சுவாமி! தாங்கள் இப்பொழுது இவ்வழியிலிருக் கும் புல்லை அடியோடு களைந்து நீராக்கி நீருடன் கலந்து அருந்திய கார ணம் எதுவோ?

சாண. : சிறுவா! நான் இவ்வழியே வந்துகொண்டிருக்கும்போது, இவ்வற்பமான புல் காலில் மாட்டி என்னைக் கீழே விழும்படி செய்தது. அதனால் அம்மாதிரி செய்தேன்.

சந். : சுவாமி! தம்மைத் தடுக்கிய புல்லை வேருடன் களைந்து வீசி எறியக்கூடாதா?

சாண. : நான் அப்படி செய்யாவிட்டால் என் மனதிலெழுந்த கோபாக் கினி என்னையே கொளுத்திவிட்டிருக்கும்.

சந். : (பயபக்தியுடன்) மகானுபவரே தமக்கு இடர்விளைத்த இந்த அற்பப்புல்லே இப்பாடுபட்டால் தமக்குத் தீமைசெய்ய நினைக்கும் மன்னர் கள் எப்பாடுபடுவார்களோ?

சாண. : (கோபத்துடன்) அடா அற்பப்பயலே என் புத்தி சாதுர் யத்தை நீ அறியமாட்டாய். மன்னர்கள் மாற்றானை வெல்ல நான்குவித சைன்யத்துடன் செல்வார்கள். நானோ என் மதியென்னும் சாதனத்தால் மன்னர்களை எளிதில் வென்றுவிடுவேன்.

சந். : (பயபக்தியுடன்) சுவாமி! தேடற்கரிய தெய்வம்போன்ற தாங்கள் யார்?

3L

MW36.12

சாண.: மைந்தா! நான் எல்லா நூல்களையும் கற்றுணர்ந்து நீதி ஸாஸ்திரத்தில் நிபுணனான மறைபோன். என்னைச் சாணக்கியனென்றும், கௌடியல் என்றும் அழைப்பார்கள். (சற்று தயங்கி சந்திரகுப்தனைப் பார்த்து) அப்பா இப்பொழுது நவநந்தர்களின் அரண்மனையில் நடக்கும் அக்கிர போஜனத்தை அபேக்ஷித்து நான் அங்கு செல்லுகிறேன். அப்படி அக்கிரபோஜனத்திற்காக அருகர்களைத் தேர்ந்தெடுக்க மௌரிய மைந்தன் ஒருவன் நியமிக்கப்பட்டிருக்கிறானாம், அவனை நீ அறிவாயா? அவன் இப்பொழுது எங்கே இருக்கிறான்?

சந்.: (மிகுந்த வணக்கத்துடன்) சுவாமி கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது என்னும் பழமொழிக்கிணங்க தாம் கேட்ட அவ்வடியான் யானே. மேலும் தங்கள் வருகையால் நந்தமரபு தழைத்தோங்குமென்றும் தங்கள் பாததூளியால் நகர் புனிதமாகுமென்றும் நினைக்கிறேன்.

சாண.: (சிறிது லச்சையுடன்) அரசகுமாரா நான் பிராமணனென்கிற செருக்கினால் உன்னை இழிவாக பேசிவிட்டேன், அது தீர ஏதாகிலும் ஒரு வரம் கேள்.

சந்.: (மிகுந்த வணக்கத்துடன்) சுவாமி அக்கிரபோஜனம் அருந்திய பின் தங்கள் பாததூளியால் ஏழையென்குடிசையைப் புனிதமாக்கிவிட்டுப் போகும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாண.: ஆகட்டும் அப்படியே வருகிறேன். வா அரண்மனைக்குப் போகலாம். (போதல்.)

சந்.: (இருவரும் நடந்துகொண்டே) சுவாமி தங்களிடம் ஒன்று சொல்ல விரும்புகினேன்.

சாண.: என்ன அது, சொல் கேட்கலாம்.

சந்.: சுவாமி! நந்தர்கள் ஒன்பதுபேரும், தம் தந்தையையும் தனையர்கள் நூற்றுவரையும், என்னையும் ஒரு பாதாள குழியில் தள்ளி, தந்தையையும், நூற்றுவரையும் கொலைசெய்துவிட்டார்கள். நான்மாத்திரம் என் புத்தி சாதுரியத்தால் தப்பினேன்.

சாண.: (கோபத்துடன் பல்லைக் கடித்துக்கொண்டு) சண்டாளர்கள் அப்படியா செய்தார்கள்.

சந்.: (அரண்மனையைச் சுட்டிக்காட்டி) சுவாமி அதோ தெரிகிறதே அதுதான் நந்தர்களின் அரண்மனை. தாங்கள் சென்றுவாருங்கள். (வணங்குதல்.)

சாண.: சரி மிகுந்த சந்தோஷம் நான் வருகிறேன் (இருவரும் பிரிந்து போதல்)

காட்சி 2

இடம்: நந்தர்கள் அரண்மனை

காலம்: நடுப்பகல்

பாத்திரகங்ள்: ஒன்பது நந்தர்கள், பரிசாரகன், மற்றுமுள்ள பணியாளர்கள்.

(சாணக்கியன் அரண்மனைக்குள் சென்று அங்கு வைக்கப்பட்டிருக்கும் பாத்திரங்களைப் பார்த்து பரிசாரகனை நோக்கி)

சாண.: இப்பொற் பாத்திரங்களும், வெள்ளிப்பாத்திரங்களும், இரசதப் பாத்திரங்களும் எதற்காக இடப்பட்டிருக்கிறது.

பரிசாரகன்: (ஒவ்வொன்றையும் சுட்டிக்காட்டி) இவ்வொன்பது பொற்பாத்திரங்கள் நந்தர்களுக்கும், வெள்ளிப்பாத்திரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிராமணர்களுக்கும், மற்றவை மற்றவர்களுக்குமாகும்.

(சாணக்கியன் தனக்குள்) அப்படியானால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உட்காரும் இடத்தில் உட்காருவோம். (உட்காருதல்)

(நந்தர்கள் போஜன அரைக்குள் வருவது)

நந்தர்கள் (சாணக்கியனைப் பார்த்து கோபத்துடன்) பிராமணர்களுக்கென்று இடப்பட்ட ஆசனத்தில் அமர்ந்திருப்பது யார்? பந்தியில் உட்காரத் தெரியாத இம்மந்திக் குரங்கை வெளியே தள்ளுங்கள்.

சாண: (நந்தர்களைப் பார்த்து பேசிக்கொண்டே எழுந்திருத்தல்.) ஏன் நீங்கள் வீணில் சப்தம் போடுகிறீர்கள். என்னைப் பரீட்சித்தும் பாருங்கள்.

நந்.: (கோபத்துடன்) பரிட்சித்துப் பார்ப்பதாம், பரிட்சித்து உம்... தள்ளுங்கள் வெளியே இவனை.

சாண.: (கோபத்துடன்) அக்கிர போஜனத்திற்கு அருகனென்று தேர்ந்தெடுத்த பின் நான் அசனமருந்தாமல் செல்லேன்.

நந்.: (அங்கிருப்பவர்களைப் பார்த்து) ஏன் சும்மா இருக்கிறீர்கள் ஆகட்டும்.

(அங்கிருந்தவர்கள் சாணக்கியனை கழுத்தில் கைகொடுத்து வெளியே தள்ளுதல்.)

சாண.: (நகர்ந்துகொண்டே தள்ளாதே! தள்ளாதே!! தள்ளாதே!!! (கீழே விழுதல். பிறகு எழுந்து கோபத்துடன் நந்தர்களைப் பார்த்து) ஏ! நந்தர்களே உங்களில் ஒருவனுகிலும் உயிருடன் இல்லாதபடி வேருடன் கொன்று இந்த இராஜியத்தை சந்திரகுப்தனுக்கு முடிசூட்டிய பின் என் அவிழ்ந்த சிகையை முடிப்பேன், இது சத்தியம். (திரை விழுதல்.)

சுபம்! சுபம்!! சுபம்!!!

இருண்ட இதயம்

[கோஹினூர்]

[இருண்ட இருதயத்தில் வெளியாகும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல!]

(கொத்து 36, மலர் 8, பக்கம் 186-ன் தொடர்ச்சி.)

7. காரிருளில் மின்னல்

தலையில் இடது கண்ணிற்குமேல் 5 அங்குலம் தழும்பு அடையாளம் உள்ள ஒரு ஆண் குழந்தையை அனாதை ஆஸ்ரமத்தின் சார்பாக **ஸ்ரீமதி வஸந்தா** அவர்களுக்கு ஸ்வீகார புத்திரனாக அளிக்கிறேன்.

பிள்ளையைப்பற்றிய குறிப்புகள்

பிள்ளை கிடைத்த இடம்:—ஜோஹூர் 4 கார்ன்வாலிஸ் ரோடு மூலையிலுள்ள குப்பைத்தொட்டி.

கிடைத்த தேதி.........7 செப்டம்பர் 1923.

பிள்ளையின் தாய்பெயர்.........தெரியவில்லை.........

(தெரிந்தால் முழுவிபரமும்)

பிள்ளைக்கு ஆஸ்ரமத்திலிட்ட பெயர்.........ஹென்றி.

ஷை விபரமுள்ள குழந்தையை ஸ்ரீமதி வஸந்தா அவர்கள் தம் பிள்ளையைப்போல் வளர்த்து பாதுகாக்கும்படியாக வேண்டிக்கொண்டு ஆஸ்ரமத்தின் சார்பாக எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,

ஜோஹூர், அனாதைகளின் அடிமை,

13 Oct. 1926 Miss Mary.

"ஹா! காந்தா!...காந்தா!...நீ மணமே செய்யவில்லையா...3 வயதில் எடுத்து வளர்த்த பிள்ளையா?......ஹா! காதலின் சக்திதான் என்னே...காந்தா...என் சகோதரி...உன்னை இத்தனை கோலத்திற்கு ஆளாக்கின பாவி யார் தெரியுமா?...நான்தான்...ஸாம் நான்தான்!..." என்று கூறி முடிக்கு முன்பே "ஹா! என்னருமை ஸாம்!...ஸாம்..." என்று கூறிக்கொண்டே ஆவேசத்துடன் எழுந்தாள்.

"காந்தா! ஆயாஸப்படாதே! உன் காதலின் சக்தி உன்னை கன்னியாக்கியதுபோல்...என் காதலின் சக்தி என்னை பிரம்மச்சாரியாக ஆக்கிவிட்டது.

"ஸாம்! உயிர் போகப்போகிறது...நான் செய்த மலைபோன்ற பாவம்...உங்களை நாதனாக அடைய முடியாது அண்ணா என அழைக்க நேரிட்டது...நீங்களே என் நாதன்...என அறிந்ததும் அண்ணா...சகோதரி என்று நாம் நிச்சயித்ததால் நீங்கள் இனி சகோதரன்தான்!...ஆமாம் உங்களை சகோதரன் என அழைக்கையில் அந்த இடம் எனக்கு...கொலைக்

களம்தான்...என்னுயிர் போகப்போகிறது...அண்ணு! சற்று உங்கள் மடியில் தலை வைத்துக்கொள்ளட்டுமோ?"

(சிறிது யோசித்து விட்டு)...இம்...ஜோதி செய்தி என்ன?

"அவளுக்கு ஒரு பெண் குழந்தை—சுடர்மணி— என்ற பெயருடனிருந்தது......ஊரில் அவளுடைய கணவனைப்பற்றி கூட ஏதோ பலவித வதந்திகள்.........ஹா! அதோ ஹென்றி வந்துவிட்டான்......ஹென்றி! ......இதுதான் உன் தந்தை! ஸா...ம்...ஹெ...ன்...றி...யை......உ...ங்...கள்...ம...க...ளுக...ளி...னை...த்து......கூ...டு...மா...ளு...ல் சுட...ரை......ம...ண...ம்...செ...ய்...து...வை...யு...ங்கள்..."

பெருமூச்சுடன் சொன்னுள் என் மடியில் படுத்துக்கொண்டே! ஹென்றியைப் பார்த்தேன். அவனும் என்னை உற்றுப்பார்த்துக் கொண்டேயிருந்தான். சிறிதுநேரம் கழித்து காந்தா என் கைகளை பிடித்து தன் முகத்தை மூடிக்கொண்டாள்.......சுமார் 15 நிமிடம் கழித்து என் கண்ணிலிருந்து விழும் நீரைத்துடைக்க கைகளை எடுத்தேன். காந்தாவின் உணர்ச்சியற்ற கைகள் பொத் என கீழே விழுந்தது. "கந்தா" என்றேன். காந்தா இல்லை. சாந்திதான்! ஹென்றி "அப்பா!...அம்மா!" என்றுசொன்னுன். தாயன்பில் விளைந்த ஹென்றி "அம்மா" என்று கூறிக்கொண்டே காந்தாவின் சவத்தில் விழுந்தான். மறு வினடி தாயைப்பிரிந்த கன்றுவின் கதறல் அந்த சிறு அறையில் நர்த்தனம் செய்தது!

காந்தாவிற்கு செய்யவேண்டிய கடைசி கடன்களை ஆராதுயரத்துடனும், உடைந்த உள்ளத்துடனும் நானும், ஹென்றியும் செய்து முடித்தோம். ஹென்றியும் உண்மைத் தகப்பனுர் நான் என்றே எண்ணி மகிழ்ந்தான். நான்மட்டும் மிஸ் மேரி அம்மாள் அவர்கள் அளித்த சேர்டிபிக்கெட்டை பத்திரமாகக் காப்பாற்றி வைத்துக்கொண்டேன். நாட்கள் ஓடின. என் இருண்ட இருதயமும் பின்னுல் ஹென்றிக்கும், சுடர்மணிக்கும் நடக்கும் என எதிர்பார்க்கும் இன்ப மணத்தை கற்பனைச் செய்ய ஆரம்பித்தது. இவ்வாறு நாட்கள் ஓடினபொழுது புதிதாக இருவரை தோட்டத்திற்கு கொண்டு வந்தார் மிஸ்டர் ஸ்பென்ஸர் துரை! இருவரும் சுமார் 38 வயதுள்ளவர்களாய் இருக்கலாம். இருவரும் பெண்களே! அதில் ஒருவளை உற்று பார்த்தேன்! இருண்ட இதயமும் "பழிக்குப் பழி" என்று என்னமோ சொல்லியது. சந்தேகத்துடன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஒருநாள் என் இதயத்தைக் கலக்கின. அந்த புதிய பெண்ணும் வேறொருவனும் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களது பேச்சில் என் துரதிர்ஷ்ட வாழ்வின் பாகங்களும் குறுக்கிடவே தடை செய்யப்பட்ட சர்ப்பம்போல் நின்று ஒருவருக்கும் தெரியாமல் அந்தப் புதிய செய்திகளைக் கேட்க ஆரம்பித்தேன்.

" யோசேப்புதான்! என்னேடேயே 15 வருடத்திற்கு முன்பே சிங்கப்பூருக்கு வந்து விட்டான். "

" ஹா! நிஜமாகவா சுந்தரி? அந்தபேதை பெண்ஜோதி! "

" அவளா? அங்கேயே கிடந்தாள் ஒரு பெண் குழந்தைகூட பிறந்தது. தாயும், சேயும், அந்த பாட்டியோடு மேட்டேரிலேயே ஒரு குடிசையில் கிடக்கிறார்களாம் "

" 15 வருடத்திற்கு முன் வந்த யோசேப்பு போகவே இல்லையா? "

" இல்லே! என்னேடேயே சிங்கப்பூரில் இருந்தான். ஜோதியிடம் 1000ரூபாய் கொடுத்துவிட்டு வந்துவிட்டான். பாவம்! அந்த 1000 ரூபாய் இந்த வருடத்திற்குள்ளாகவே கரைந்து விட்டது "

" யோசேப்பு என் உன்னேடேயே வந்து விட்டான்? "

" யோசேப்புக்கு நான் வேலைக்காரியாக இருந்தாலும் கலியாணத்திற்கு முன்பே எங்களுக்கு தொடர்பு இருந்தது. ஜோதியை மணந்ததும் அவள் மீது அதிக அன்பு காட்ட ஆரம்பித்தான். ஆதலால் ஒரு நாள் ஜோதி தன் பால்ய காதலன்—அவன் பேர் கூட ஸாமோ?—ஸோமோ? ...என்று இருக்கும்—அவன் படத்தைப் பார்த்து புலம்பிக் கொண்டிருக்கையில் யோசேப்புக்குக் காட்டி நான் அவனை உண்மையாய் நேசிக்கிறேன் எனக்கூறி எல்லா ஆஸ்தியோடும் கூட்டிக்கொண்டு சிங்கப்பூருக்கு வந்தேன் "

" இப்பொழுது யோசேப்பு எங்கே? "

" அவன் ஒரு மாதத்திற்குமுன் சிங்கப்பூர் ஆஸ்பத்திரியில் ஜன்னியில் விழுந்துகிடந்தான். குடியினுல் அவன் சரீரமே அழிந்துவிட்டது! "

" நீ என் வந்துவிட்டாய்? "

" பணமும் அழிந்தது! ஆளும் தொலேந்தான். "

" என்ன? "

" அவன் அன்றைக்கே இறந்துவிட்டான். மறுநாள் நான் இங்கே வந்துவிட்டேன். "

" அந்தப் பேதைப்பெண் கதி. "

" விஷம் கிடைத்தால் சாகிறாள்...... "

(தொடரும்.)

மழை

[Miss A. Bella Mary Goodwin]

"கவிதைப்பகுதி"

மழையே மழையே பெய்வாயே
மானிலம் குளிரச் செய்வாயே
மழையே மழையே வருவாயே
மனிதருக் கின்பம் தருவாயே

(2)

பட்ட மரங்கள் தளி(ர்)த்திடவே
பல செடிகொடிகள் பிழைத்திடவே
திட்டமுடன் நீ வருவாயே
தினமும் மகிழ்வே தருவாயே

(3)

மாந்தர் மனமும் குளி(ர்)ந்திடவே
மாபெரும் நதிகள் வழிந்திடவே
சாந்தமுடன் நீ வருவாயே
சனங்களின் ஆசீர்பெருவாயே

(4)

ஏழை, எளியன் எண்ணமின்றி;
எல்லாருக்கும் பெய்வாயே!
கோழை யென்றும், கொலைஞனென்றும்;
கொஞ்சமேனும் பாராயே!

(5)

தீயினால் எரியும் ஊரினையே
தீரமாய் அணைக்கும் தீரன் நீயே
நீ யின்றி நிலத்தில் உயிர் எங்கே?
நீயே சக்தி—ஜீவனிங்கே!

பெற்றோர் சங்கங்கள்

காட்டுப்புத்தூர், பெ. ச. ஆண்டா விழா :—28-4-1946. ஷை ஊர் ஆண், பெண் போர்டு பாடசாலைகளின் பெ. ச. ஆண்டுவிழா, பஞ்சாயித்து போர்டு தலைவர். ஸ்ரீ S. K. முத்துசாமி செட்டியார் அவர்களின் தலைமையில் மிக விமரிசையாய் நடந்தது. காலையில் மாணவ, மாணவிகளின் ஊர்வலமும், கும்மி, கோலாட்டம், சம்பாஷணை முதலிய நிகழ்ச்சிகளும் நன்கு நடைபெறலாயின. ஸ்ரீ. அர்த்தநாரி அடிகள் "கல்வி" என்னும் பொருள்பற்றி அரியதோர் பிரசங்கம் செய்தனர்.

L. R. Venkataraman,
H. M. & Secretary.

திண்டிவனம் ஸ்ரீ நாகம்மாள் பெண் பாடசாலை தாய்மார் கூட்டம்: 30-4-46. இஃது விழுப்புரம் ரேஞ்சு சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்ட்ரெஸ் அம்மாள் மிஸ் ஜோயேல் B. A. L. T. அவர்கள் தலைமையின் கீழ் நடந்தேறியது. மாணவிகளின் கும்மி, கோலாட்டம், நடனம் முதலியவற்றைக் கண்டுகளித்து தலைவர் மனமகிழ்ந்து, பெற்றோர்க்கும், மற்றோர்க்கும் அரிய விஷயங்களை எடுத்துக் கூறினர். ஷைபாடசாலையின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. அப்பாசாமி அவர்கள் அனைவர்க்கும் நன்றி கூறினர். பின்னர் தலைவருடன் "போட்டோ" எடுக்கப்பட்டதுடன் கூட்டம் இனிது முடிந்தது.

A. Appaswamy,
Teacher Manager.

கரூர், மேலப்பாளயத்தைச்சேர்ந்த வேடிச்சிபாளயம் ஆரம்பப்பாடசாலையின் பெ. ச. விழா 19-5-46-ல் ஷை ரேஞ்சு ஸீனியர் டெப். இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. மகாலிங்கம் பிள்ளை அவர்கள் (B. A., L. T.) தலைமையில் வெகு விமரிசையாய் நடைபெற்றது. அவ்வமயம் "பெண்கல்வி" என்பதைப்பற்றி திரு. C. ஷண்முகம் B. A. அவர்கள் சொற்பொழிவாற்றினர். ஆடல் பாடல்களில் தேர்ந்த மாணவர்களுக்குத் தலைவர் பரிசுகள் வழங்கினர். பின்னர் செயலாளர் திரு. M. ராசப்பபிள்ளையவர்கள் அனைவர்க்கும் நன்றி கூறினர்.

The Secretary, Parents' Association,
Vedichipalayam.

விடுகதை விடைகள்

(கொத்து 36, மலர் 10-11, பக்கம் 174)

விடைகள் : (1) பச்சைகுத்தல். (2) கோழிமுட்டை. (3) அகப்பை. (4) விளக்கமாறு.

சங்கீதம்

(By B. Thomas Victor, Music Teacher.)

ஹிந்துஸ்தான் (சலரநௌஜவான் மெட்டு) திச்ரகதி ஆதிதாளம்

கல்விச்சிறப்பு

பல்லவி

தா ஸ ஸா ரி *க ரி ஸ ஸா ரி	தா ஸ ஸா ரி	*க ரி ஸ ; ;
பள்ளி வாருங் கள் . . பாலர்	பள்ளி வாருங்	கள் . . . .
ரீ ம ப ர் த பா ம கா ரி	தா ஸ ஸா ரி	*க ரி ஸ ; ;
துள்ளி ஆடி பாடி ஓடி	பள்ளி வாருங்	கள் . . . .

சரணங்கள்

தா ஸ ஸா ரி கா , ; ,	ரீ ஸ ரீ க	ஸா , ; ,
கல்வி யேபு வில். . .	நல்லுயர் பொ	ருள் . . .
கா க பா க பா , ; ,	கா ப தா நி	பா , ; ,
செல்வ •ருங்க ளை . . .	தேற்றி டும	ருள்
*நீ நி நி நீ · நீ நி நி தா	பா த ப மா	கா , . ஸ
கால மதில் பால ருமமை	சீர்ப டுத்தி	ட . . நீர்

(மற்ற சரணங்களை இதேமாதிரி பாடவும்)

2. நல்லறிவையும் சொல்வலிமையும்
பல்துறைகளில் நற்தொழில்களும்
பாலருமக்கேற்ற முறையில்பயின்றிட—நீர். (பள்ளி)

3. எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்
உண்மைஇதனை உணர்ந்திடுவீரே
மண்ணிலுயிர்க்கேற்றதுணை கல்வியென்றறி—நீர் (பள்ளி)

4. கற்றவர்க்கென்றும் சிறப்புயர்ந்திடும்
நற்றவர்பெயர் நலம்பொழிந்திடும்
சொற்களால் புகழ்ந்துரைக்கும் கல்விகற்றிட—நீர் (பள்ளி)

குறிப்பு :—நக்ஷத்திர குறி இட்ட இடங்களில் சாதாரண காந்தாரமும் கைசிகிநிஷாதமும் வரும்.

Reg. No. M. 1534.

WANTED 2 Secondary Grade Trained Male or Female teachers on a starting salary of Rs. 40 plus dearness allowance.

Apply to Rev. Father L. Soma,
Kilachery,
(*Via*) Tiruvellore, Chingleput Dt.

WANTED Secondary and Higher Elementary Trained Teachers on liberal salary.

Apply to Rev. Father Elias D'Souza,
R. C. Church. Veloor, Amarapatnam P. O.,
Tanjore Dt.

WANTED one Secondary Grade trained mistress for St. Mary's H. E. School, Manaparai. Salary Rs. 28 + Rs. 16.

WANTED one Secondary Grade trained Teacher (male or female) for St. Joseph's H. E. School, Manaparai, Salary Rs. 30 + 16.

Apply to the Manager.
R. C. Schools, Manaparai,
Trichy Dt,

WANTED two Higher Elementary trained teachers. Salary Rs. 20 + 2 + Dearness allowance.

Apply to the manager,
St. Anthony's Elementary School,
Coonoor, R. S. Nilgiris.

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.
Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. No. Ty.—1, 14—6—1946.